இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,722 — JUNE 18, 1915.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[Proclamation by Special Commissioner, relating to Firearms.]

விசேஷ கம்மிஷனரால் பிரசித்த பத்திரம்.

துப்பாக்கிகள்.

இந்தமாதம் 10 ந் திகதியைக்கொண்ட பிரசித்தபத்திரத்தின் 4 ம் பிரிவில் சொல்லியபடி, துப்பாக்கிகள் வைத்துக்கொண்டு கொழும்பு நகரசங்க எல்லைக்குள் வசிக்கும் எவரும், அத்துப்பாக்கிகளை மிகச் சமீபத்திலிருக்கும் பொலிஸ் ஸ்டேஷனில் ஒப்படைக்கத் தவறியிருந்தால், அவைகளை இக்ஷணமே அவ்வாறு ஒப்படைக்கும்படி இத்தால் ஏவப்படுகிறார்கள்.

அப்படிச் செய்யத் தவறும் எவரும் அல்லது உத்தரவுச்சீட்டுப் பெறாமல் துப்பாக்கிகள் வைத்திருக்கக் காணப்படும் எவரும் கடும் அபராத தண்டனைக்கு ஆளாவார்கள்.

ஐரோப்பிய சாதியத்தைச்சார்ந்த எவரையாவது அல்லது படைவகுப்பில் முறையாகச்சேர்ந்து ஆயுதங்கள் கொண்டுதிரிய உரிமையுடைய படைவகுப்பினர் எவரையாவது இக்கட்டளை குறிக்கமாட்டாது.

கட்டளைப்பபடி,<br>
ஆர். டபிள்யு. பேர்ட்,<br>
ஸ்பெஷல் கம்மிஷனர்.

நகரசங்க ஆபீசு,<br>
கொழும்பு, 1915 ம் ஹு ஜூன்மீ 16 ந் தேதி.

---

[Proclamation by Special Commissioner.]

விசேஷ கம்மிஷனரால் வெளிப்படுத்தல்.

இப்போ நடந்த கலகத்தின் காரணத்தைப்பற்றி அல்லது அதற்கு உதவியாயிருந்ததைப்பற்றி சொல்லக்கூடியதாக இருக்கிற யாவரும் என்னை டவுன் கோல்வில் (Town Hall) சனிக்கிழமை தவிர மற்றும் நாட்களில் 11 மணிக்கும் 3 மணிக்கும் இடையில் என்னுடைய கந்தோரில் காணலாம்.

ஆர். டபிள்யு. பேர்ட்,<br>
விசேஷ கம்மிஷனர்.

1915 ம் ஆண்டு ஆனிமாதம் 17 ந் திகதி.

---

[By-laws made by the Sanitary Board of Colombo, relating to erecting or re-erecting huts, &c.]

3. சுகாதாரசங்கந் தாபிக்கப்பட்டிருக்கும் யாதுமொரு பட்டணத்தின் எல்லைகளினுள்ளே, பின்வருங் கொந்தீசுக் கட்டுப்பாட்டுக் கமைந்தேயல்லாமல், யாதொரு குடிசையாவது வீடாவது கட்டுவது, திரும்பக் கட்டுவது, அல்லது மேலதிகமாகச் சேர்த்துக் கட்டுவது, எவரொருவருக்கும் நியாயமுறையாகமாட்டாது.

எந்த ஒரு குடிசையாவது வீடாவது கட்டப்பட்டால், திரும்பக் கட்டப்பட்டால், அல்லது மேலதிகமாகச் சேர்த்துக் கட்டப்பட்டால்; அதைச் சுற்றிவர, காற்று நின்றுலாவத்தக்க சுத்த வெளியிடம், பின்சொல்லுகிறபடி விட்டிருக்கவேணும். அப்படி மேலதிகமாகச் சேர்த்துக் கட்டப்படுமாகில், அந்தக் கட்டடத்தின் எந்தப் பாகமாயினும், நீண்டிருக்குந் தாழ்வாரங்கள் இரண்டரை யடிக்கு மேற்படவாவது, அந்த வெளியிடத்தினுள் வர விடப்படாது :—

(1) ஏதுமொரு ஸ்ரேட்டின் அல்லது தெருவீதியின் அருகில், அந்த ஸ்ரேட்டின் அல்லது தெருவீதியின் மத்தியிலிருந்து இருபத்தைந்து அடி தூரத்துக்கு வெளியிடம் விட்டிருக்கவேணும்.

(2) பிற்பக்கத்து வெளியிடத்தில் சங்கத்தலைவர் உத்தரவுபண்ணுகிறபடி குசினி, குளிக்குமிடம், அல்லது கக்கூசு அல்லாத வேறேதும் குடிசைக்கு அல்லது வீட்டுக்கு, ஐம்பது அடிவரையில் வெளியிடம் விட்டிருக்க வேணும். அந்தக் குறித்த இடைவெளியிடத்தில் அரைவாசியாவது, வீடு கட்டப்படுகிற, திரும்பக் கட்டப்படுகிற, அல்லது மேலதிகமாகச் சேர்த்துக் கட்டப்படுகிற வீட்டு நிலமுடையவனுக்கே உரிய சொந்த இடமாயிருக்கவேணும்.

(3) (வலது இடது) பக்கத்தில், சங்கத்தலைவர் உத்தரவுபண்ணுகிறபடி, ஆகக்கிட்ட இருக்குங் கட்டடத்துக்குப் பதினைந்து அடிவரையில் இடை வெளியிடம் இருக்கவேணும். குறித்த இடைவெளியில் அரைவாசியாவது வீடு கட்டப்படுகிற, திரும்பக் கட்டப்படுகிற அல்லது மேலதிகமாகச் சேர்த்துக்கட்டப்படுகிற வீட்டு நிலமுடையவனுக்கே உரிய சொந்த இடமாயிருக்கவேணும்.

புறனடை : சங்கத்தலைவர், ஏதேனு மொரு விசேஷ காரியத்திலே, இந்த விதியைக் கவனியாமல் தமது புத்திப்படியே செய்விக்கலாம்; ஆனாலும், அவர் பின்வரும் இரண்டு காரியங்களிலும் திருப்திப்பட்டுக்கொண்டாலொழிய, அவர் அப்படிச் செய்விக்கப்படாது :—

(1) கட்டப்பட இருக்கிற, திரும்பக் கட்டப்பட இருக்கிற, அல்லது மேலதிகமாகச் சேர்த்துக் கட்டப்பட இருக்கிற வீட்டினது அல்லது குடிசையினது, அல்லது மனிதர் குடியிருக்கிறதற்குப் பாவிக்கப்பட்டுவருகிற அல்லது பாவிக்கப்பட எண்ணப்பட்டிருக்கிற வேறேதுமொரு அயல்வீட்டினது அல்லது குடிசையினது, சுகாதார நிலைமைக்காவது சுக நயத்துக்காவது ஏதேனுமொரு நட்டங்கேடு விளையாமலிருக்க வேணும்; அன்றியும்,

(2) ஏதேனுமொரு ஸ்ரீட்டை அல்லது தெருவீதியை இனிமேல் நேராக்குதல், அகலமாக்குதல், அல்லது பெருப்பிசதல் என்பதற்கு, இந்த விதியைக் கவனிக்காமல் ஏதுஞ் செய்தால், அது இடையூறு செய்யாமலிருக்கவேணும்.

மேலும் ஓர் புறனடை: ஏதுமொரு வீட்டினது, ஸ்ரீட்டிலிருந்து அல்லது வீதியிலிருந்து அப்பாற்பட்ட பக்கத்தில், காற்று உலாவவிட்டிருக்கிற வெளியிடத்துப்பாகத்திலே, சங்கத்தலைவருக்குப் பிரியமானதொரு இடத்தில் குசினி, குளிக்குமிடம், அல்லது கக்கூசு கட்டுவதற்குச் சங்கத்தலைவர் உத்தரவுபண்ணலாம்.

மேலும் ஓர் புறனடை: கக்கூசின் மலசலத்தை அப்புறப்படுத்துவதற்கான ஒழுங்கையை அல்லது முடுக்கைச் சங்கத்தார் ஏற்படுத்தி விடப்பட்டிருந்தால், அல்லது ஏற்படுத்திவிட உத்தேசித்திருந்தால்; அந்தக் கக்கூசு, அப்படியான ஒழுங்கைக்கு அல்லது முடுக்குக்கு அல்லது உத்தேசித்த ஒழுங்கைக்கு அல்லது முடுக்குக்கு, அடுத்திருக்கவேணும்.

கொலோனியல் சக்கிறுத்தார் ஆபீசில்,
கொழும்பில், 1915 ம் ஸ்ரீ ஆனிமீ 14 ந் உ.

ஆர். ஈ. ஸ்ற்றப்ஸ்,
கொலோனியல் சக்கிறுத்தார்

---

## LAND SALES.

### காணி விற்பனவுகள்.

**No. 785, N. P.**—1915 ம் ஆண்டு ஆடிமாதம் 14 ந் திகதி, புதன்கிழமை, காலை 10 மணிக்கு, தன் ஆபிசில், வடமாகாணத்து மன்னார் உதவி கவற்ணமேந்து ஏசண்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திறகூறி விற்கப்படும். 33 காணித்துண்டுகள், வட மாகாணத்து மன்னார் டிஸ்திறிக்கின் மாந்தை வடக்கு முதலிய பகுதியிலிருக்கின்றது.

மாந்தை வடக்கு.

| காணித்துண்டின் இல. | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம், ஏ. | ரூ. | ப. | ஏக்கர் ஒன்றின் பாணிப்புவிலை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| | | படம் 4,037. குறிச்சி—பாலைப்பெருமாற் கட்டு. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 1219 | — | பறட்டைக்காடு | 1 | 0 | 36 | 15* |
| | | படம் 4,038. குறிச்சி—மனல்மோட்டை. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 1220 | அந்தோனி அதிரியாம்பிள்ளை கூட்டி அடைத்தது | நெற்காணி | 0 | 0 | 26 | 20* |
| 1221 | ஷை | 4 புளியமரமுள்ள தோட்டம் | 0 | 0 | 11 | 20* |
| 1222 | ஷை | நெற்காணி | 0 | 0 | 6 | 20* |
| 1228 | அந்தோனி சுவாந்தக்குருசு கூட்டி அடைத்தது | ஷை | 1 | 0 | 4 | 20* |
| | | படம் 4,078. குறிச்சி—நெடுங்கண்டல். உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 1327 | என். சரவணை | காடு | 1 | 0 | 14 | 25* |
| | | படம் 4,092. குறிச்சி—கருங்கண்டல். உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 1372 | எ. பிலிப்பு சக்கரவத்தி | நெற்காணி | 4 | 0 | 18 | 25 |
| 1373 | ஷை | ஷை | 1 | 3 | 3 | 25* |
| | | படம் 4,094. குறிச்சி—சிறுவிளாங்குளி. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 1380 | உதுமாநெயினு முகம்மது மீராசாய்பு | பறட்டைக்காடு | 4 | 2 | 26 | 20 |
| | | படம் 4,095. குறிச்சி—சிறுவிளாங்குளி. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 1386 | மீராசாய்பு காசீன் | பறட்டைக்காடு | 3 | 1 | 0 | 20 |
| | | படம் 4,174. குறிச்சி—பாலைப்பெருமாற்கட்டு. உரித்தாளி—அரசாட்சியார் | | | | |
| 1609 | சி. அவுருன் | காடு | 1 | 2 | 10 | 15* |
| 1610 | தீ. அந்தோனியும், வீ. செபமாலையும் கூட்டி அடைத்தது | நெற்காணி | 0 | 0 | 34 | 15* |
| 1611 | ஷை | ஷை | 0 | 0 | 12 | 15* |
| 1612 | — | வாய்க்காலுக்காக விடப்பட்ட காணி | 0 | 0 | 5 | — |
| 1613 | — | ஷை | 0 | 2 | 38 | — |
| 1614 | பி. சுவாம்பிள்ளையும், சீ. அவுருன் | காடு | 7 | 0 | 15 | 15* |
| 1615 | — | காடு | 2 | 0 | 0 | 15* |
| 1616 | — | வாய்க்காலுக்காக விடப்பட்ட காணி | 0 | 2 | 34 | — |
| 1617 | வீரசிங்கம் பேதிறு | காடு | 11 | 0 | 27 | 15* |
| 1617½ | — | வாய்க்காலுக்காக விடப்பட்ட காணி | 0 | 0 | 28 | — |
| 1618 | — | கட்டுக்கரைக்குளக்கட்டுக்காக விடப்பட்ட காணி | 5 | 2 | 26 | — |
| | | மாந்தை தெற்கு. | | | | |
| | | படம் 4,376. குறிச்சி—உடையடி. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 2365 | பீ. அகமது மீராசாய்பு | பத்தைக்காடு | 3 | 0 | 25 | 20 |
| 2366 | — | கடலுக்காக விடப்பட்ட காணி | 1 | 0 | 7 | — |
| | | படம் 33A. குறிச்சி—பறப்பாங்கண்டல் சிறுக்குளம். உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 1 | தீ. சூசைப்பறனாந்து | காடு | 1 | 1 | 20 | 20* |
| 2 | ஷை | காடு | 3 | 3 | 16 | 20* |
| 3 | — | வாய்க்கால் கட்டுக்காக விடப்பட்ட காணி | 1 | 1 | 6 | — |
| 4 | — | வளிக்காக விடப்பட்ட காணி | 0 | 1 | 18 | — |

* நட்சத்திரக்குறி அடையாளமிடப்பட்ட காணிக்கு ஒரு ஏக்கருக்கு இரண்டு ரூபாய் வீதம் இப்பொழுது தண்ணீர் வரி அறவிடப்படும், ஆனால் இந்த வீதம் காலத்துக்குக்காலம் அரசாட்சியாரால் மாற்றப்படும்.

| காணித் துண்டின் இல. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம், ஏ. றூ. ப. | ஏக்கர் ஒன்றின் பாணிப்பு விலை ரூ. |
|---|---|---|---|---|
| | | மேற்கு மூலே. | | |
| | படம் 4,368. குறிச்சி—பாலம்பிட்டி. உரித்தாளி—அரசாட்சியார். | | | |
| 2342 | வீரவாகு ஐயம்பிள்ளை .. | பத்தைக்காடு .. | .. 4 0 5 .. | 15 |
| 2343 | — . | ரேட்டுக்காக விடப்பட்ட காணி | .. 0 1 14 .. | — |
| | படம் 4,369. குறிச்சி—பாலம்பிட்டி. உரித்தாளி—அரசாட்சியார். | | | |
| 2344 | மைலு சரவணை .. .. | பத்தைக்காடு .. | .. 0 3 38 .. | 15 |
| 2345 | முருகர் கார்த்திகேசு | ஷை .. | .. 1 3 29 . | 15 |
| | படம் 4,378. குறிச்சி—பாலம்பிட்டி. உரித்தாளி—அரசாட்சியார். | | | |
| 2368 | காசினாதர் கந்தையா .. | பத்தைக்காடு .. | .. 6 0 2 .. | 15 |
| | | முசலி தெற்கு. | | |
| | படம் 4,195. குறிச்சி—கொண்டச்சி. உரித்தாளி—அரசாட்சியார். | | | |
| 1683 | பி. ஆர். எஸ். முகையதீன் பக்கீர் .. | காடு .. | .. 65 2 26 .. | 50 |

4,037 ம் இலக்கப்படத்தில் 1,219 ம் இலக்கத்துண்டு வாங்குகிறவன் ஏறக்குறைய 400 அடித்தூரமுள்ள வாய்க்காலை குருவில் சுலுசுவாய்க்காலிலிருந்துதானே வெட்டிக்கொள்ள வேண்டும். 4,174 ம் இலக்கப்படத்தில் 1,614 ம், 1,615 ம் இலக்கத் துண்டுகளை வாங்குகிறவன் ஏறக்குறைய ⅞ கட்டை தூரமுள்ள வாய்க்காலை குருவில் சுலுசுவாய்க்காலிலிருந்துதானே வெட்டிக்கொள்ள வேண்டும். 4,174 ம் இலக்கப் படத்தில் 1,617 ம் இலக்கத்துண்டு வாங்குகிறவன் கிட்டயிருக்கிற கட்டுக்கறைக் குளத்து வாய்க்காலிலிருந்து ஒரு வாய்க்காலைத்தானே வெட்டிக்கொள்ள வேண்டும்.

இக்காணிகளைப்பற்றிய வேறு விபரங்களை மன்னார் உதவி ஏசன்றுத்துரையவர்களிடத்திலும் அவைகளின் படங்களைப்பற்றி அளவுகாரிய பெரியதுரையிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1915 ம் ஹு ஜூன்மீ 4 ந் உ.

ஆர். ஈ. ஸ்றப்ஸ்,
கொலோனியல் சக்கிறுத்தார்.

---

**No. 1,403, E. P.**—1915 ம் ஆண்டு ஆவணிமாதம் 5 ந் திகதி, காலை 11 மணிக்கு தன் ஆபீசில், கீழ் மாகாணத்து திருக்கோணமலை டிஸ்திறிக்கு கவற்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித் துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது தீர்த்துவிடப்படும் அல்லது வேறு விதமாகப் பராதீனப்படுத்தப்படும். 40 காணித்துண்டுகள், கீழ் மாகாணத்து திருககோணமலை டிஸ்திறிக்கின் தம்பலகமப்பற்று கொட்டியாபுரப்பற்று திருக்கோணமலைப் பட்டணப் பகுதிகளிலிருக்கின்றன.

| காணித் துண்டின் இல. | குறிச்சி. | கோள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம், ஏ. றூ. ப. | ஒரு ஏக்கரின் மதிப்புவிலை ரூ. |
|---|---|---|---|---|---|
| | | பிரதமபட இலக்கம் 4,491. உரித்தாளி—இ. சிவகுருநாதர் கூட்டிச்செய்தது. | | | |
| 1554 | ஆண்டாங்குளம் | — .. | நெல்வயல் | .. 4 1 22 .. | 70* |
| | | | உரித்தாளி—முடி. | | |
| 1558 | ஷை .. | — .. | நெல்வயல் | .. 1 3 33 .. | 50*† |
| 1559 | ஷை .. | — .. | ஷை | .. 2 2 0 .. | 50*† |
| | | பிரதமபட இலக்கம் 4,196. உரித்தாளி—முடி. | | | |
| 294 | நீரோட்டுமுனை | கெப்றின்கிறகேம் .. | தென்னைக்கேற்றது | .. 22 3 29 .. | 20‡ |
| | | பிரதமபட இலக்கம் 4,869. உரித்தாளி—முடி. | | | |
| 3590 | சின்னக்கிணியா | எம். அசுமாத்து .. | தென்னைக்கேற்றது | .. 1 1 11 .. | 15 |
| 3591 | ஷை .. | — .. | ஷை | .. 1 0 27 .. | 15 |
| 3592 | ஷை .. | காசீம் நோகுவால் கூட்டிச்செய்யப்பட்டது .. | தென்னைமரங்களுள்ளது | 3 3 14 .. | 100 |
| 3593 | ஷை .. | — .. | ரேட்டுக்காக விடப்பட்டது | .. 0 0 35 .. | — |
| 3594 | ஷை .. | பி. குப்பைதம்பி .. | தென்னைக்கேற்றது | .. 1 2 25 .. | 30 |
| 3595 | ஷை .. | கே. அவ்வுக்காசீன் .. | ஷை | .. 2 1 14 .. | 30 |
| 3596 | ஷை .. | எ. யெம். காசீம்காஜியார் .. | ஷை | .. 2 3 6 .. | 30 |
| 3597 | ஷை .. | ஷை .. | ஷை | .. 0 3 11 .. | 15 |
| | | பிரதமபட இலக்கம் 4,877 உரித்தாளி—முடி. | | | |
| 3622 | பெரியகிணியா | எஸ். சுடானு .. | நெல்லுக்கேற்றது | .. 2 0 32 .. | 25§ |
| 3623 | ஷை .. | ஷை .. | ஷை | .. 2 0 9 .. | 20§ |
| 3624 | ஷை .. | சுதார் கூட்டிச்செய்தது .. | ஷை | .. 1 1 1 .. | 50§ |
| 3625 | ஷை .. | சீனி கூட்டிச்செய்தது .. | ஷை | .. 0 0 31 .. | 50§ |
| | | பிரதமபட இலக்கம் 4,592. உரித்தாளி—முடி. | | | |
| 2065 | தோப்பூர் .. | — .. | விடப்பட்ட தரை | .. 0 0 32 .. | — |
| 2066 | ஷை .. | எம். ஆர். காதர்பாச்சா .. | நெற்கேற்றது | .. 7 2 7 .. | 20‡‖ |
| | | பிரதமபட இலக்கம் 4,862. உரித்தாளி—முடி. | | | |
| 3557 | மூதூர் .. | — .. | விடப்பட்ட தரை | .. 0 3 11 .. | —‖ |
| 3558 | ஷை .. | லோறன்ஸ் அந்தோனி .. | நெற்கேற்றது | .. 2 3 4 .. | 20‖ |
| 3560 | ஷை .. | — | ஷை | .. 0 1 38 .. | —‖ |
| 3561 | ஷை .. | அந்தோனி சுவானி | ஷை | .. 0 2 32 .. | 20‖ |

* இக்கண்டங்கள் ஆண்டாங் குளத்தால் நீர்பாய்ச்சத்தக்கவை. தற்கால விகிதம் கட்டுவேலைக்கு ஏக்கருக்கு ரூ. 1·50. தாபரிப்புக்கு ஏக்கருக்கு 63 சதமும்.

† இக்கண்டங்கள் கொள்விலைப் பணம் 9/10 பங்கு கட்டாததற்காக விற்பனவுக்கு பிரசித்தம்செய்யப்பட்டது.

‡ இக்கண்டங்களில் மரமுண்டு.

§ இக்கண்டங்கள் நீர்பாய்ச்சல் செய்யக்கூடியவையாய்வரும். கொள்வனவுகாறர் அரசாட்சியார் நியமிக்கும் விகிதத்தைப் பின்னிட்டுக் கொடுக்கவேண்டும்.

‖ அல்லைக் குளத்தால் நீர்பாய்ச்சல்செய்யக்கூடியவை. தற்கால விகிதம் கட்டுவேலைக்கு ஏக்கருக்கு ரூ. 2·22. தாபரிப்புக்கு 63 சதம். *, ‖ லொட்டுகள் வாங்குபவர்கள் அரசாட்சியார் நியமிக்கும் வீதத்தை இனிமேல் கொடுக்க வேண்டியது. தற்காலம் நடைபெறும் விகித ஒழுங்குகளுக்கு நியமிக்கப்படும் வீதம் மேற்படாமலிருக்குமென்பதை உத்தரவாதம்பண்ண இயலாது. இப்போ இந்தக் கண்டங்கள் சொல்லப்பட்ட வீதங்களுக் கடக்கமாகவிருக்கிறது.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம்; ஏ. று. ப. | ஒரு ஏக்கரின் மதிப்பு விலை ரூ. |
|---|---|---|---|---|---|
| | | பிரதமபட இலக்கம் 4,882. உரித்தாளி—முடி. | | | |
| 3633 | சம்பூர் | கெ. செல்லப்பாவால் கூட்டிச் செய்யப்பட்டது | தென்னந்தோட்டம் | 0 1 17 | 50 |
| 3634 | ஷை | கே. ஆறுமுகம் கூட்டிச்செய்தது | ஷை | 0 0 34 | 50 |
| 3635 | ஷை | ஆறுமுகம் உருத்துச்சொன்னது | தென்னந்தோட்டம் | 0 0 16 | 20 |
| 3636 | ஷை | — | தென்னைக்கேறறது | 0 0 26 | 15 |
| 3637 | ஷை | எம். வயிரமுத்து கூட்டிச்செய்தது | தென்னந்தோட்டம் | 0 1 19 | 30 |
| 3638 | ஷை | எல். கந்தப்பன் கூட்டிச்செய்தது | ஷை | 0 3 11 | 20 |
| 3639 | ஷை | — | வழியுருத்துக்காக விடப்பட்டது | 0 0 15 | — |
| 3640 | ஷை | கே. கோணமலை | தென்னைக்கேற்றது | 7 3 5 | 17·50‡ |
| 3641 | ஷை | — | ரோட்டுக்காக விடப்பட்டது | 0 0 38 | — |
| 3642 | ஷை | — | வழிக்காக விடப்பட்டது | 0 0 12 | — |
| 3643 | ஷை | — | தென்னைக்கேற்றது | 0 2 18 | 17·50 |
| 3644 | ஷை | — | சைவசமயக் கோவிலுக்காக விடப்பட்டது | 0 1 24 | — |
| 3645 | ஷை | — | ரோட்டுக்காக விடப்பட்டது | 0 0 12 | — |
| 3646 | ஷை | எஸ். கோணமலை | தென்னைக்கேற்றது | 2 2 38 | 17·50‡ |
| | | பிரதமபட இலக்கம் 4,890. உரித்தாளி—முடி. | | | |
| 3708 | பட்டித்திடல் | எம். மாணிக்கன் | தோட்டத்துக்கேற்றது | 0 1 20 | 17·50 |
| | | பிரதமபட இலக்கம் 4,897. உரித்தாளி—முடி. | | | |
| 1 | வப்பியா | ஆர். கந்தப்பர் | நெல்வயல் | 1 3 23 | 20 |
| 2 | ஷை | ஷை | ஷை | 1 1 19 | 20 |
| | | பிரதமபட இலக்கம் 4,899. உரித்தாளி—முடி. | | | |
| 1 | பச்சனூர் | றெவ. பாதர் சீ. பொனல் | தென்னைக்கேற்றது | 2 0 32 | 17·50 |

மேற்சொல்லிய காணிகளைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் திருக்கோணமலை உதவி ஏசன்றுத்துரையிடமிருந்தும் படங்கள் கொழும்பு நில அளவைக் கந்தோர் தலைவரிடமுமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபீசில்,
கொழும்பில், 1915 ம் ஹு ஜூன்மீ 7 ந் வ.

ஆர். ஈ. ஸ்றப்ஸ்,
கொலோனியல் சக்கிறத்தார்

---

**No. 1,404, E. P.**—1915 ம் ஆண்டு ஆடி மாதம் 22 ந் திகதி, வியாழக்கிழமை, பிற்பகல் ஒன்றரை மணிக்கு, கீழ் மாகாணத்து கவர்ணமேந்து ஏசன்றவர்கள் மட்டக்களப்புக் கச்சேரியிலிருந்து இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற்கூறி விற்பனவு அல்லது உருத்துச் சோதனைப்பிரகாரம் தீர்வை யல்லது வேறேவிதமாகக் கடவைப்படுத்தல் செய்வார். இக்காணித்துண்டுகளைத் திரும்பவும் விற்பனவுக்கு வைத்தற்கு ஞாயம் என்னவென்றால் அவைகள்பேரில் வருமதியான வாயுதாப்பணம் இறுக்கப்படாமையே.

| காணியின் இலக்கம். | காணியின் பெயர். | வாயுதாப்பணம் கொடுக்கத்தவறிய வரின் பெயர். | விபரம். | விசாலம், ஏ. று. ப. | கண்டத்தின் தரிப்பு விலை ரூ. |
|---|---|---|---|---|---|
| | | கோறளைப்பற்று. பிளான் இலக்கம் 4,256. குறிச்சி—கற்குடா. | | | |
| 596 | கற்குடாப்பூமி அல்லது காயான்காட்டுப்பூமி | வாழைச்சேனை கந்தப்பர் நல்லதம்பி | காடு | 5 2 34 | 101 |
| | | பிளான் இலக்கம் 4,676. குறிச்சி—கற்குடா. | | | |
| 2706 | ஓரக்கல்பூமி | (1) நாகப்பர் சின்னத்தம்பி, (2) வஸ்தியான் மரியான்தம்பி வாழைச்சேனை | தென்னந்தோட்டம் | 4 2 6 | 320 |
| | | சம்மாந்துறைப்பற்று. பிளான் இலக்கம் 4,484. குறிச்சி—வீரமுனை. | | | |
| 1504 | நெல்லிக்காடு | சம்மாந்துறை சுலைமாலெவ்வை ஆலிம் உமறுலெவ்வைப்போடி | வேளாண்மைக்கேற்ற காடு | 3 3 23 | 59 |
| 1505 | ஷை | ஷை | ஷை | 3 2 14 | 54 |
| | | பிளான் இலக்கம் 4,579. குறிச்சி—சம்மாந்துறை. | | | |
| 2000 | வேப்படிவழவு | சம்மாந்துறை, 4 ம் குறிச்சி மரக்காயர்பிள்ளை உமறுகத்தா | வெட்டைப்பூமி | 0 0 19 | 18 |
| | | மண்முனை வடபகுதி. பிளான் இலக்கம் 4,638. குறிச்சி—புதுக்குடியிருப்பு. | | | |
| 2490 | சின்ன ஏத்தாலத்தோட்டம் | காத்தான்குடி 3 ம் குறிச்சி அப்துள் றகிமான்லெவ்வை ஆதம்வாவா | தென்னந்தோட்டம் | 0 0 38 | 20 |
| | | மண்முனை தென்பகுதி. பிளான் இலக்கம் 4,498. குறிச்சி—அம்பிளாந்துறை. | | | |
| 1595 | சின்னத்தளவாய் | முதலைக்குடா, குமாரவேலாப்போடி சீனித்தம்பி | வேளாண்மைப்பூமி (வெட்டை) | 1 3 28 | 38·50 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விபரங்களை மட்டக்களப்பு அரசாட்சி ஏசன்றுத்துரையவர்களிடமும் அவைகளின் படங்களை நில அளவைக் காரிய அத்தியக்ஷரிடமும் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபீசில்,
கொழும்பில், 1915 ம் ஹு ஜூன்மீ 9 ந் வ.

ஆர். ஈ. ஸ்றப்ஸ்,
கொலோனியல் சக்கிறத்தார்.

# LAND ACQUISITION NOTICES.

அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

[Weragama in Pallesiya pattu, Matale East.]

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கல்லுக்குவாரிக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 6,557. குறிச்சி—பல்லேசியபத்துவைச்சேர்ந்த வேர்காமம்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| A 58 | பழிங்குமளை தோட்டம் .. | வெண்ணிலம் .. | வென்ச்டரக்ஸ் .. .. | 0 | 2 | 1·12 |
| B 58 | டிை .. | டிை .. | டிை .. .. | 0 | 0 | 4 |
| C 58 | அடகொஸ்காமுல சேனை .. | டிை .. | எச். அப்புஹாமி .. .. | 0 | 0 | 4·25 |
| D 58 | பழிங்குமளை தோட்டம .. | டிை .. | வென்ச்டரக்ஸ் .. .. | 0 | 0 | 12·62 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1915 ம் ஞூ ஆடிமாதம் 22 ந் தேதியிலன்று பிற்பகல் 1 மணிக்கு மாத்தளையில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தளைக் கச்சேரி,
1915 ம் ஞூ ஆனிமீ 11 ந் உ.

டபிள்யு. ஜே. எல். ஏஜர்சன்,
உப அரசாட்சி ஏசண்டு.

---

[Unaveli, Puttalam District.]

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் உளுவெளிக் குளத்துக்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதம் படத்து இலக்கம் 4,364. குறிச்சி—உளுவெளி.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | றூ. | பே. |
|---|---|---|---|---|---|---|
| M 78 | பூக்குளம்தோட்டம் .. | தென்னஞ்செய்கை .. | மெ. ய. மெ. மெய்யப்பசெட்டி | 1 | 1 | 16 |
| N 78 | உளுவெளிக்காணி .. | துப்பரவுபண்ணின காடு .. | டிை .. | 86 | 3 | 32 |
| J 78 | உளுவெளிவயல் .. | — .. | டிை .. | 2 | 1 | 13 |
| P 78 | டிை .. | — .. | டிை .. | 0 | 1 | 36 |
| Q 78 | டிை .. | — .. | டிை .. | 1 | 0 | 38 |
| R 78 | எலுக்குளம்சேனைத்தோட்டம் | தென்னந்தோட்டம் .. | டிை .. | 0 | 0 | 6 |
| S 78 | டிை .. | டிை .. | டிை .. | 0 | 1 | 30 |
| T 78 | டிை .. | டிை .. | டிை .. | 0 | 0 | 8 |
| U 78 | பட்டங்கட்டிசேனைத்தோட்டம் | டிை .. | டிை .. | 3 | 1 | 14 |
| | | | | 96 | 0 | 33 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொண்டு அதற்காக பிரதமப்படம் 4,365 ம் துண்டு 2,149 புத்தளம் பற்று அம்பளவெளிக் குறிச்சியில் மறிச்சிக்கட்டிக்குளம்காடு, அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1915 ம் ஞூ ஆடிமாசம் 6 ந் தேதியிலன்று பகல் ஒரு மணிக்கு புத்தளத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

புத்தளம் கச்சேரி,
1915 ம் ஞூ ஆனிமீ 8 ந் உ.

எஸ். எம். பி. வெந்தர்கோன்,
எச். டபிள்யு. கொட்றிங்டனுக்காக,
உப அரசாட்சி ஏசண்டு.

---

[Marapona, Ratnapura District.]

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பெல்மதுளை றெயில்பாதைக்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதம படத்து இலக்கம் 92. குறிச்சி—மாறப்பனை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 31 N4b | பாபகேகொடல்ல .. | தென்னந்தோட்டம் .. | இ. டிங்கிரிமகாத்மையாவும் மறுபேரும் .. | 0 | 0 | 10·75 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1915 ம் ஞூ ஆடிமாசம் 12 ந் தேதியிலன்று பிற்பகல் 1 மணிக்கு இரத்தினபுரிக கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1915 ம் ஞூ ஆனிமீ 12 ந் உ.

ஆர். என். தேன்,
அரசாட்சி ஏசண்டு.

[Tenders for provisioning Hospitals, Ingiriya, Undugoda, and Marawila.]

பின்னால் வரும் அட்டவணையிற் காணப்படும் ஆசுப்பத்திரிகளுக்கு 1915 ம் ஆண்டு ஐப்பசிமீ 1 ந் திகதி தொடக்கம் 1918 ம் ஆண்டு புரட்டாதிமீ 30 ந்திகதி வரைக்கும் தேவையான சாப்பாட்டுச் சாமான்களை கொந்திருத்து ஒப்பந்தம் செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு, "கொந்திருத்து ஒப்பந்த விசாரணைச்சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத்தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும் அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடதுகை மேல்மூலையில் "ஆசுப்பத்திரிக்குச் சாப்பாட்டுச் சாமான்கள் கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1915 ம் வருஷம் ஆடிமாதம் 6 ந் தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல்வேண்டும்.

5. அச்சிட்ட கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்பவேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக் கேள்விக்காரன் கையொப்பமிடல்வேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் கேள்வி சரியீனமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் பின்வரும் அட்டவணையின்படி முற்பணம் கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திருத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திருத்தைக் கையேற்க அல்லது தக்க பிணை கொடுக்கத் தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய்விடும். அப்படிக் கட்டப்பட்ட கொந்திருத்துக்காரனின் பேர் கவண்மேந்தில் யாதொரு கொந்திருத்தும் எடுக்க ஏலாமல் அரசாட்சியாரின் பத்திரிகையில் (Defaulting List) போடப்படும், கொந்திருத்து ஒப்பந்தந் தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஒத்துக்கொள்ளப்படாத மற்றக் கொந்திருத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும். பிரதம சிவில் மெடிக்கல் ஆபிசர் கந்தோரில் முற்பணம் ஏற்கப்பட மாட்டாது.

7. சாமான் மாதிரிகள் கேட்கும்போது கொடுக்கவேண்டும்.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திருத்து ஒப்பந்தக்காரன் பின்வரும் அட்டவணையின்படி பணப்பிணை கொடுக்கவும் ஒப்பந்தத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாகக் கட்டிய தொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும்.

9. பிரதான சிவில் மெடிக்கலாபிசரிடமிருந்து முன்னரே எழுத்தில் உத்தரவு பெற்றாலன்றி ஒப்பந்தங்களை இன்னுமொருவருக்கு கொடுத்தளிக்க, சாட்டுதல்பண்ண, அல்லது கீழ்க் கொந்திருத்தாகக் கொடுக்கப்படாது.

10. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக் கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

11. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை அல்லது முழுமையையும், ஒன்று, அல்லது இரண்டு, அல்லது மூன்று வருஷங்களுக்கு ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவண்மேந்தாருக்குண்டு.

12. இன்னும் தேவையான விவரங்களை கொழும்பு பிரதான சிவில்மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(கையொப்பம்) டபிள்யூ. சீ. எச். ரிறிப்,
பிரதம சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1915 ம் ஆண்டு ஆனிமீ 15 ந் உ.

அட்டவணை.

| ஆசுப்பத்திரியின் பெயர். | சாப்பாட்டுச் சாமான்களின் விவரம். | முற்பணத்தின் தொகை ரு. | பணப்பிணையின் தொகை ரு. |
|---|---|---|---|
| இன்கிரியா | பாலுடன் சமைத்து | 100 | 200 |
| உண்டுகொடை | ஷை | 100 | 200 |
| மாருவில்லை | ஷை | 200 | 400 |

---

[Tenders for provisioning Mannar Hospital.]

பின்னால் வரும் அட்டவணையிற் காணப்படும் ஒப்பந்தக்கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி தொடக்கம் 1918 ம் ஆண்டு புரட்டாதிமீ 30 ந் திகதி வரைக்கும் தேவையான சாப்பாட்டுச் சாமான்களை கொந்திருத்து ஒப்பந்தம் செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒப்பந்தக் கேள்விக்கடதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு, "கொந்திருத்து ஒப்பந்த விசாரணைச்சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத்தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. ஒப்பந்தக் கேள்விக்கடதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும் அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. ஒப்பந்தக் கேள்விக்கடதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடது கை மேல்மூலையில் "ஆசுப்பத்திரிகளுக்குச் சாப்பாட்டுச் சாமான்கள் கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1915 ம் ௵ ஆடிமீ 6 ந் தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல்வேண்டும்.

5. அச்சிட்ட கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்பவேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக்கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் கேள்வி சரியீனமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் பின்வரும் அட்டவணையின்படி முற்பணம் கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திருத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திருத்தைக் கையேற்க அல்லது தக்கபிணை கொடுக்கத்தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய்விடும். அப்படிக் கட்டப்பட்ட கொந்திருத்துக்காரனின் பேர் கவண்மேந்தில் யாதொரு கொந்திருத்தும் எடுக்கஏலாமல் அரசாட்சியாரின் பத்திரிகையில் (Defaulting List) போடப்படும், கொந்திருத்து ஒப்பந்தந்தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஏற்றுக்கொள்ளப்படாத மற்றக் கொந்திருத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும். பிரதம சிவில்மெடிக்கல் ஆபிசர் கந்தோரில் முற்பணம் ஏற்கப்பட மாட்டாது.

7. சாமான் மாதிரிகள் கேட்கும்போது கொடுக்கவேண்டும்.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திருத்து ஒப்பந்தக்காரன் பின்வரும் அட்டவணையின்படி பணப்பிணை கொடுக்கவும் ஒப்பந்தத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பாரத்தின்பேரால் முற்பணமாகக் கட்டிய தொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும்.

9. பிரதான சிவில் மெடிக்க லாபீசரிடமிருந்து முன்னரே எழுத்தில் உத்தரவுபெற்றிருந்தாலன்றி, கொந்திருத்தை இன்னுமொருவருக்குக் கொடுத்தளிக்கவாகுதல், அல்லது சாட்டுதல்பண்ணவாகுதல், அல்லது கீழ்க் கொந்திருத்தாய்க் கொடுக்கவாகுதல் கூடாது.

10. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக்கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

11. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை அல்லது முழுமையையும், ஒன்று, அல்லது இரண்டு, அல்லது மூன்று வருஷங்களுக்கு ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவண்மேந்தாருக்குண்டு.

12. இன்னுந் தேவையான விபரங்களை கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(கையொப்பம்) டபிள்யு. ஜீ. எச். ரிறிப்,
பிரதம சிவில் மெடிக்கல் ஆபீசருக்காக.

கொழும்பு, 1915 ம் ஆண்டு ஆனிமீ 9 ந உ.

அட்டவணை.

| ஆசுபத்திரியின் பெயர். | சாப்பாட்டுச்சாமான்களின் விவரம். | முற்பணத்தின் தொகை ரூ. | பணப்பிணையின் தொகை ரூ. |
|---|---|---|---|
| மன்னார் ஆசுபத்திரி .. | சமைக்கப்பட்ட சாப்பாடு, பாலுடன் .. | 100 .. | 200 |

[Tenders for constructing New Quarters for Salt Watcher at Kala-oya, Puttalam District.]

காளஓயாவில் உப்புக் காவல்க்காறனுக்கு தற்போது இருக்கும் இடத்திலேயே ஓர் புதிய வீட்டைக் கட்டவென்று எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை புத்தளம் உப அரசாட்சி ஏசண்டவர்கள் 1915 ம் ஆண்டு ஆனிமீ 29 ந் திகதி பிற்பகல் 1 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளுவார்.

செய்யவேண்டிய வேலையின் விபரம்.

வீடு 15 அடி நீளமும் 12 அடி அகலமும்உள்ள இரண்டு அறைகளையுள்ளதாயும் முன்னும் பின்னும் 6 அடி அகலமுள்ள விறாந்தையுள்ளதாயு மிருக்கவேண்டும். சிவர்கள் வரிச்சினாலும் களிமண்ணாலுங் கட்டப்படவேண்டும்.

கூரையை கிடுகினால் வேய்ந்து அதற்கு மேல் பூட்டுகளைப் போடவேண்டும்

பழைய வீட்டிலுள்ள 3 கதவுகளையும் 1 யன்னலையும் பழுதுபார்த்து புது வீட்டில் போடவேண்டும்.

வீட்டோடை சேர்த்து 10 அடி நீள மகலமுள்ளதாயும் முன்னுக்கு 4 அடி அகலமுள்ள ஓர் விறாந்தையையுள்ளதாயுமோர் சமையல்க் காம்பறையைக் கட்டவேண்டும்.

வீட்டுக்கு 3 கதவும் 1 யன்னலும் போடவேண்டும். சமைய லறைக்கு 1 கதவும் 1 யன்னலும் போடவேண்டும்.

எல்லாக் கதவுகளுக்கும் யன்னல்களுக்கும் புணைச்சல் போடவேண்டும், கதவுகளுக்கு பூட்டுந் துறப்பும் அத்துடன் தாளும் போடவேண்டும்.

சிவர்களைக் களிமண்ணால்ப் பூசி வெள்ளையடிக்க வேண்டும்.

கூரைக்கு மேல் பாரமாக பூட்டுகளைப் போடவேண்டும். கட்டிடங்களுக்கு வேண்டிய மரத்தை டிக்கன்னுவக் காட்டிலிருந்து தீர்வையில்லாமல் வெட்டி யெடுத்துக்கொள்ளலாம்.

கேள்விக்காறர் பின்வரும் நிபந்தனைகளைக் கவனிக்க வேண்டும் :—

1. கேள்விக்காறன் எந்தக் கச்சேரியிலாவது ஒரு கச்சேரியில் முற்பணமாக இவ் ஆனிமாதம் 28 ந் திகதியில் அல்லது அதற்குமுந்தி 10 ரூபாய் கட்டவேண்டும், கேள்விக்காரன் தனது கேள்வியை உதவி ஏசண்டவர்கள் ஏற்றுக்கொண்டு அவரால் குறிக்கப்படும் ஞாயமான காலத்துள் உடன்படிக்கை பண்ணிக்கொள்ளத்தவறுகில் அவ் முற்பணம் பறிமுதலாக்கப்படும்.

2. புத்தளத்தில் தனக்குக் காகிதம் அல்லது நொத்திஸ் கிடைக்கத்தக்கதாக ஓர் விலாசத்தைக் கேள்விக்காறன் கொடுக்கவேண்டும்.

3. கேள்வியை ஏற்றுக்கொண்ட 4 கிழமைக்குள் வேலையை முடிக்கவேண்டும்.

4. அச்சவாரம் கொடுக்கப்படமாட்டாது.

5. இன்னும் வேண்டிய விபரங்களை புத்தளம் உப்புத்துரையவர்களிடம் பெற்றுக்கொள்ளவும்.

எஸ். எம். பி. வேந்தர்கோன்,
புத்தளம் கச்சேரி, உதவி ஏசன்டருக்காக.
1915 ம் ௵ ஆனிமீ 11 ந் திகதி.

[Tenders for repairing the Salt Department Officers' Quarters, Kombumunai, &c., Puttalam District.]

"கொம்புமுனை, இல்லையடி, பச்சைக்காட்டு, மூதல் உப்பளங்களில் உள்ள உப்பு டிப்பாட்மெண்டு உத்தியோகத்தரின் வீடுகளைப் பழுதுபார்க்க" வென்று மேலுறையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் புத்தளம் உப அரசாட்சி ஏசண்டரவர்களால் 1915 ம் ஆண்டு ஆனிமீ 29 ந் திகதி பிற்பகல் 1 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

செய்யவேண்டிய வேலையின் விபரம்.

உழுத்தும் பழுதாயும்போன கிடுகுகளையும் வரத்தையும் எடுத்துப்போட்டு புதிசான கிடுகுகளும் வரமும் போடவேண்டும்.

கூரைக்குமேல் பாரத்துக்குப் பூட்டுகளை வைக்கவேண்டும்.

வேலிகளைப் புதுக் கிடுகுகளாலும் கம்புகளாலும் அடைக்கவேண்டும்

வீட்டின் நிலத்தை தண்ணீர்க் களிமண் போட்டு உயர்த்தி இறுக்கி மட்டமாக்கவேண்டும்.

முதற்பேருடைய வீட்டுக்கு இரண்டு புதிய பூட்டுந் துறப்பும் போடவேண்டும்.

முதற்பேருடையவுங் கங்காணியுடையவும் வீட்டுச் சுவர்களுக்கு வெள்ளையடித்து கதவுகளுக்கும் யன்னல்களுக்கும் மை பூசவேண்டும்.

முதற்பேருடைய வீட்டில் ஜதமாகப் பாவிக்கப்படும் அறையின் மேற்புறத்துக் கட்டைச் சுவரை யிடித்துத் திரும்பக் கட்டவேண்டும்.

சிவர்களைத் தேவையான இடங்களில் பழுதுபார்த்துப் பூச்சுப் பூசவேண்டும்.

கங்காணியுடைய வீட்டுக்குப் பூட்டுந் திறப்பும் போடவேண்டும்.

கங்காணியுடைய வீட்டுக்கு மலஞ்சலங் கழிக்குமோர் அறையையுங் கட்டவேண்டும்.

கேள்விக்காறர் பின்வரும் நிபந்தனைகளைக் கவனிக்கவேண்டும்.

1. கேள்விக்காறன் எந்தக் கச்சேரியிலாவது முற்பணமாக பத்து ரூபாய் கட்டவேண்டும். கேள்விக்காறன் உதவி ஏசண்டரால் குறிக்கப்படும் காலத்துள் உடன்படிக்கைபண்ணிக்கொள்ளத் தவறுகில் அப்பணம் பறிமுதலாக்கப்படும்.

2. தனக்கு காகிதம் அல்லது அறிவித்தல் கிடைக்கக்கூடியதாய் புத்தளத்தில் ஓர் விலாசத்தைக் கேள்விக்காறன் கொடுக்கவேண்டும்.

3. முற்பணம் கொடுக்கப்படமாட்டாது.

4. கேள்வியை ஏற்றுக்கொண்டதாக அறிவித்தல் கொடுத்தபின் நாலு கிழமைக்குள் வேலைசெய்து முடிக்கவேண்டும்.

வேறும் வேண்டிய விபரங்களை புத்தளம் உப்புத்துரையவர்களிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

எஸ். எம். பி. வேந்தர்கோன்,
புத்தளம் கச்சேரி, உப அரசாட்சி ஏசண்டுக்காக.
1915 ம் ௵ ஆனிமீ 10 ந் திகதி,

[Supreme Court Criminal Sessions, Colombo.]

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் மேற்கு டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1915 ம் ஆண்டு ஆடிமாதம் 12 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,

டபிளியு. தெ லிவேரு,
மேல்மாகாண பிஸ்காலுக்காக.

கொழும்பு பிஸ்கால் கந்தோர்,
1915 ம் ௵ ஆனி௴ 14 ந் ௳.

---

[Supreme Court Criminal Sessions, Jaffna.]

இலங்கைத்தீவிற சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்டடி நாம் பிரசித்தபடுத்துவதாவது: யாழ்ப்பாணத்து டிஸ்திறிக்கோட்டு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் யாழ்பாண டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1915 ம் ஆண்டு ஆடிமாதம் 12 ந்திகதியாகிய திங்கட்கிழமை காலமே 10 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கடவர்கள்.

இங்ஙனம்,

ஏ. அரியகுட்டி,
பிஸ்காலுக்காக.

பிஸ்கால் கந்தோர்,
1915 ம் ௵ ஆனி௴ 10 ந் ௳.

---

[Supreme Court Criminal Sessions for Chilaw and Puttalam, at Colombo.]

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் சலாபம் புத்தளம் டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1915 ம் ஆண்டு ஆடிமாதம் 12 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,

எஸ். டி. சமறசிங்க,
பிஸ்காலுக்காக.

குருநாக்கல் பிஸ்கால் கந்தோர்,
1915 ம் ௵ ஜூனி௴ 10 ந் ௳.

---

[Supreme Court Criminal Sessions for Ratnapura, at Colombo.]

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் இரத்தினபுரி டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1915 ம் ஆண்டு ஆடி௴ 12 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,

ஆர். என். தேன்,
பிஸ்கால்.

இரத்தினபுரி பிஸ்கால் கந்தோர்,
1915 ம் ௵ ஆனி௴ 8 ந் ௳.

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.